பத்தாண்டு ஆட்சியில் வேலைவாய்ப்பை உருவாக்கினீர்களா? வறுமையைக் குறைத்தீர்களா?

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்காவிடில் நாட்டில் பேரழிவு ஏற்படும்!

மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா எச்சரிக்கை!

புதுடெல்லி,ஜூலை.5-

"பத்தாண்டு கால ஆட்சியில் வேலைவாய்ப்பை உருவாக்கினீர்களா? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்காவிடில் நாட்டில் பேரழிவு ஏற்படும்" என்று மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசியதாவது:

தமிழ்நாட்டின் பிரதிநிதி என்ற பெருமையோடும் திமுக காரன் என்ற பெருமிதத்தோடும் முன் எப்போதும் இல்லாத அளவு கம்பீரத்தோடு இந்த அவையில் நிற்கின்றேன். ஏன் தெரியுமா? அதற்கான காரணத்தை சொல்லுகின்றேன். 18வது மக்களவைத் தேர்தல் ஆறு வாரங்களுக்கும் மேலாக நடந்து 64 கோடி வாக்காளர்கள் தீர்ப்பளித்துள்ளனர். எப்போதாவது தமிழ்நாட்டிற்கு அபூர்வமாக வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரத்துக்காக எட்டு முறை வந்தார். ஆனால் அது வீணாகி விட்டது. நாங்கள் போட்டியிட்ட 40 தொகுதிகளிலும் நாங்களே வெற்றியை குவித்தோம். போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்ற இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடு. எங்கள் தலைவரும் தமிழ்நாட்டு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் வியூகத்திற்கும் முயற்சிக்கும் நன்றி.

அவையின் துணைத் தலைவர் அவர்களே! மக்கள் தெளிவான தீர்ப்பு வழங்கியுள்ளார்கள் ஆனால் தெளிவான பெரும்பான்மை வழங்கவில்லை. மாட்சிமைக்குரிய குடியரசு தலைவர் தனது உரையின் மூன்றாவது பத்தியில் இந்த அரசு பெரும்பான்மையால் மகிழ்ச்சி கொள்வதாக குறிப்பிட்டு இருக்கிறார். நான் இதை சொல்வதற்கு வருத்தப்படுகிறேன் மக்கள் தெளிவான தீர்ப்பு வழங்கியுள்ளார்களே தவிர தெளிவான பெரும்பான்மை வழங்கவில்லை. குடியரசு தலைவர் உரை என்பது வழக்கமான ஒன்று. 1919இல் நிறை வேற்றப்பட்டு 1921 இல் முதன் முதலில் தொடங்கப்பட்ட இந்த உரையின் மரபை நாங்கள் மதிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

அன்றைக்கு அமைச்சரவையால் தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பிரிட்டிஷ் பேரரசி உரையாக நிகழ்த்துவார் . ஆனால் அமெரிக்காவில் அப்படி அல்ல. அமெரிக்க ஜனாதிபதி தன்னால் தயாரிக்கப்பட்ட உரையை தானே வாசிப்பார். விவாதம் இல்லாமல் விமர்சனம் இல்லாமல் எந்த நாட்டு அரசாங்கமும் வெற்றி பெற முடியாது எந்த குடியரசும் உயிர் வாழ முடியாது என்று அமெரிக்க முன்னாள் அதிபர் ஜான் எப் கென்னடி சொன்னார். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய உலகளாவிய பார்வையையும் அவரது அரசாட்சி சிறப்பையும் ஒருமுறை அமெரிக்க நாடாளுமன்றத்தில் தெளிவாக வெளிச்சம் போட்டு காட்டியவர் ஜான் எஃப் கென்னடி. இப்பொழுது இங்கு அமைச்சரவையால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை குடியரசு தலைவர் உரையாக நிகழ்த்தி இருக்கிறார். எனவே இதை நாங்கள் விமர்சித்தால் குடியரசுத் தலைவரை விமர்சிப்பதாக புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் அந்த அறிக்கையை தயாரித்தது அமைச்சரவை அதை வாசித்தவர் மட்டுமே குடியரசுத் தலைவர்.

பிரித்தாளும் சூழ்ச்சியை விட பொருளாதாரமே முக்கியம்!

இந்திய மக்கள் தெளிவாக செய்தியை சொல்லி இருக்கிறார்கள். முதலாவதாக பிரித்தாளும் சூழ்ச்சியை விட பொருளாதாரமே முக்கியம் என்று உணர்த்தி இருக்கிறார்கள். மதத்தோடு அரசியலை கலப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று மத நம்பிக்கை உடையவர்களே நிரூபித்திருக்கிறார்கள். மூன்றாவதாக கற்பனையான இந்துராஷ்டிரத்தில் வாழ்வதைவிட கண்ணியமாக இந்த நாட்டில் வாழ்வதே அவசியம் என்பதை உணர்ந்து இருக்கிறார்கள்.

இதையெல்லாம் நான் எப்படி சொல்லுகிறேன் என்றால், எங்கே ராமர் கோயில் திறப்பு விழாவை கோலாகலமாக நடத்தினார்களோ அந்த பைசாபாத் தொகுதியிலே பிஜேபி வீழ்த்தப்பட்டி ருக்கிறது. வாரணாசி தொகுதியில் கடந்த முறை 4 லட்சத்து 85 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பிரதமர் நரேந்திர மோடி இந்த முறை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். இது முந்தைய அரசின் மீது மக்களுக்கு மகிழ்ச்சியும் இல்லை திருப்தியும் இல்லை என்பதற்கான அடையாளம். குடியரசுத் தலைவர் உரையானது அரசின் திட்டங்களையும் அரசு அளிக்கும் முன்னுரிமையும் உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் இது கடந்த பத்தாண்டு கால ஆட்சியின் புராணமாகவே உள்ளது. குடியரசு தலைவர் உரையில் அரசாங்கம் அதைச் செய்தது அரசாங்கம் இதை செய்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த அரசாங்கம்? கடந்த முறை நடந்தது பாரதிய ஜனதா அரசாங்கம் தற்போது நடப்பது தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கம். எந்த கட்சி அதிக இடங்களை கைப்பற்றி இருக்கிறதோ அந்த கட்சியை அரசமைக்க குடியரசுத் தலைவர் அழைப்பு விடுப்பார். அந்த தனிக்கட்சிக்கு பெரும்பான்மை இல்லாவிட்டால் சில கட்சிகளை தன்னோடு இணைத்துக் கொண்டு அரசமைத்து நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு கோருவார்கள்.

இப்படித்தான் வெங்கட்ராமன் குடியரசுத் தலைவராக இருந்த போது நடந்தது கே.ஆர். நாராயணன் குடியரசுத் தலைவராக இருந்தபோது நடந்தது. ஆனால் இப்போது அப்படி நடக்கவில்லை. மேலும் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி. களின் தலைவரே தவிர பிஜேபி எம்பிக்களின் தலைவர் அல்ல . பிஜேபி தனது தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பிக்களுடன் அமர்ந்து தலைவரை தேர்ந்தெடுத்தார்களா என்று அறிய நான் விரும்புகிறேன். அப்படி நடக்கவே இல்லை அதை நினைத்து நான் ஆச்சரியப்படுகிறேன். ஆகையால் அந்த தலைவர் கட்சியின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். (இடையூறுகள் குறுக்கீடுகள்) நீங்கள் ஓரங்கட்டப்பட்டவர்கள். தயவு செய்து என்னை பேச விடுங்கள். நீங்கள் பின்னர் பேசலாம். (குறுக்கீடுகள்) ராகேஷ் ஜி நீங்கள் பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) இந்த சல சலப்புக்கெல்லாம் நான் அடிபணிய மாட்டேன் . (குறுக்கீடுகள்)

பிஜேபி ஆட்சியில் நாடாளுமன்ற மைய மண்டபம் கைவிடப்பட்டது . நாம் இப்போது புதிய நாடாளுமன்ற கட்டிடத்துக்கு வந்து விட்டோம். பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 300 ஆண்டுகளுக்கும் மேலாக அதே நாடாளுமன்ற கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது ஆனால் நாம் புதிய கட்டிடத்துக்கு வந்து விட்டோம் . நாடாளுமன்ற மைய மண்டபம் மூடப்பட்டதால் மக்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோடு ஐந்து ஆண்டுகள் ஆனாலும் பழகவும் முடியாது, அவர்களை சந்திக்கவும் முடியாது.

எந்த நாடாளுமன்ற மைய மண்டபத்தை மூடி விட்டார்களோ அதே நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அமர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தலைவரை தேர்ந்தெடுக்கிறார்கள் . பழைய நாடாளுமன்ற கட்டிடமும் மைய மண்டபமும் புதிய பாராளுமன்ற கட்டிடத்தை விட சிறப்பான இடம் என்பதை உணர்கிறீர்களா? ஜனாதிபதி திரௌபதி முர்மு அவர்களுக்கு இந்த அவை நடவடிக்கையை முழுவதுமாக பார்க்க முடியாது. எதிர்க்கட்சி வரிசையில் நிகழ்வதை பார்க்கவே முடியாது. ஏனென்றால் சன்சாத் தொலைக்காட்சி தற்போது ஆளுங்கட்சி வரிசையை மட்டுமே தான் காண்பிக்கிறது.

எதிர்க்கட்சியினரை எங்களை சன்சாத் தொலைக்காட்சி காட்ட வேண்டும் . நாங்கள் அவையின் மரபுக்கு முரண்பாடாக நடந்தால் கூட அதையும் காட்ட வேண்டும். மக்கள் முடிவு எடுக்கட்டும் நாங்கள் செய்வது தவறா சரியா என்று. அவை நடவடிக்கையை முழுவதுமாக காட்டுவதுவே சன்சாத் தொலைக்காட்சியின் கடமை . ஒரு உறுப்பினர் அவையில் மயங்கி விழுந்த பொழுது அதை காட்டாமல் மறைத்து விட்டார்கள். ஆளுங்கட்சியை சேர்ந்த எத்தனை பேர் ஓடி வந்தார்கள்? அவர் மயக்கம் அடைந்து விழுந்த பொழுது பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சரைத் தவிர ஆளுங்கட்சியை சேர்ந்த எவரும் வரவில்லை .

கூட்டாட்சித் தத்துவம்!

நான் மாட்சிமைக்குரிய ஜனாதிபதி அவர்களுடைய கவனத்திற்கு இந்த விஷயத்தை கொண்டு செல்கிறேன். நாங்கள் நாடாளுமன்ற மைய மண்டபத்தால் கவரப்பட்டவர்கள். நீங்கள் மக்களவை உறுப்பினர்களும் மாநிலங்களவை உறுப்பினர்களும் சந்திப்பதை விரும்பவில்லையா? பிரித்தாளும் சூழ்ச்சியா? மக்கள் தெளிவான தீர்ப்பை வழங்கி உள்ளார்கள் அவர்கள் திருப்தியாக இல்லை. மற்ற பிரச்சினைகளை விட பொருளாதார பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியாவில் இளைஞர்களின் மக்கள் தொகை 64 சதவீதம். ஒவ்வொரு மாதமும் 10 லட்சம் பேர் இளைஞர்கள் ஜனத்தொகையில் நுழைகிறார்கள். இது மிகப்பெரிய மக்கள் தொகை விகிதாச்சாரம். வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படாவிட்டால், பேரழிவை ஏற்படுத்தும். இந்த தீர்ப்பு ஏழைகளால் இளைஞர்களால் மதச்சார்பின்மையில் நம்பிக்கை உள்ளவர்களால் கூட்டாட்சி தத்துவத்தில் நம்பிக்கை உடையவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பு . இத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டதால் தான் நீங்கள் இன்று கூட்டணியோடு ஆட்சியில் இருக்கிறீர்கள். நான் வருத்தத்தோடு செல்கிறேன்.

ஆளுங்கட்சி வரிசையில் இருக்கின்ற எனது நண்பர்கள் பலரது முகத்தில் இன்று புன்னகை இல்லை. கடந்த ஆட்சியின் போது பி.ஜே.பி. எம்பி களின் எண்ணிக்கை 303 தேசிய ஜனநாயக கூட்டணி எம்பிகளின் எண்ணிக்கை 353 .ஆனால் தற்போது பிஜேபி எம்பிக்களின் எண்ணிக்கை 240 அவர்களுடைய கூட்டணி கட்சிகளையும் சேர்த்து 293 . இது எதைக் காட்டுகிறது? இந்த 63 எம்பிகளின் இழப்பு பிஜேபி கூட்டணி கட்சிகளுக்கு அல்ல. பிஜேபிக்கு மட்டுமே இந்த 63 எம்.பி. இழப்பு. மக்கள் பாரதிய ஜனதாவின் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள். ஜூன் 4 பிற்பகல் 3 மணி அளவில் தேர்தல் முடிவு வரைபடம் 293, 230 என்று நின்றது .மறுநாள் காலை வரை அதே நிலையில் நீடித்தது. அதன் பிறகு தான் வரைபடம் ஏற்ற இறக்கங்களை சந்தித்தது. பிரதமர் மோடி கூட ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பின்தங்கியே இருந்தார். வரைபடம் நிலையாக நின்ற அந்த ஜூன் நான்கு பிற்பகல் 3 மணியளவில் பல்வேறு யூகங்கள் பின்னப்பட்டன. வாக்கு வித்தியாசங்கள் 5000 மற்றும் ஆயிரத்தில் வெற்றி பெற்ற தொகுதிகள் எத்தனை? கணக்கிட்டு பார்த்தால் அந்த யூகமும் அச்சமும் உண்மையாக கூட இருக்கலாம். ஆனால் நான் குற்றம் சுமத்தவில்லை.

ஆனால் குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டது போல் தெளிவான பெரும்பான்மையை மக்கள் அளிக்கவில்லை . 25 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டு விட்டதாக குடியரசுத் தலைவர் தனது உரையில் பூரிப்புடன் சொன்னார் . உலக வங்கி புள்ளிவிவரப்படி இந்திய மக்கள் தொகையில் 10% பேர் அதாவது 14 கோடி பேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளனர். 2023 ஆம் ஆண்டு நிதி ஆயோக் அறிக்கை சொல்கிறது 15 சதவீதம் ஏழைகள் இருப்பதாக அதாவது 22 கோடி பேர். 22 கோடி மக்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்றால் அது இங்கிலாந்து பிரான்ஸ் ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளின் ஒட்டுமொத்த மக்கள் தொகைக்கு சமம். இதுதான் பொருளாதார வளர்ச்சியா?

80 கோடி மக்கள் ரேஷன் கடையில் இலவசமாக உணவு பொருள்களை வாங்குவதற்கு வரிசையில் நிற்கிறார்கள். ஆனால் நீங்கள் பொருளாதாரத்தில் இரண்டாவது இடம் மூன்றாவது இடம் என்று பிதற்றுகிறீர்கள். எனது நண்பர் பிரபு படேலி சொந்த ஊரான மும்பையில் தான் ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரரும் இருக்கிறார் ஆசியாவின் மிகப்பெரிய குடிசை பகுதியும் இருக்கிறது . இதுதான் சோசியலிசம். மிகப்பெரிய பணக்காரரும் அங்கே இருக்கிறார் மிகப்பெரிய குடிசை பகுதியும் அங்கே இருக்கிறது இதுதான் இந்தியா.

நீங்கள் பத்தாண்டு காலம் ஆட்சியில் இருந்து விட்டீர்கள் ஆனால் அரசியலில் ஒரு வாரம் என்பதே நீண்ட காலம். மக்கள் உங்களுக்கு பத்தாண்டு காலம் கொடுத்தார்கள் நீங்கள் என்ன செய்தீர்கள்? இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தீர்களா? வறுமையை குறைத்தீர்களா? விவசாயிகளின் மீது அக்கறை கொண்டீர்களா? ஒன்றை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும், முன்பை போல் முரட்டுத்தனமாக நாடாளுமன்றத்தில் மசோதாக்களை கொண்டு வந்து திணிக்க முடியாது. மக்களவையிலும் எதிர்க்கட்சி பலம் வாய்ந்ததாக இருக்கிறது மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி வலுவாகவே உள்ளது.

அடங்க மறுத்த ஒன்றிய அரசு கட்டுப்படும்!

இந்தக் கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் இருவரை பற்றி நாம் முக்கியமாக இங்கே குறிப்பிட வேண்டும். ஒருவர் எனது கால் நூற்றாண்டு கால நண்பர் நிதிஷ் குமார். அவர் சமூகநீதியில் நம்பிக்கை கொண்டவர். அவர் இந்த அரசை மக்கள் தொகை கணக்கெடுக்க சொல்லி வலியுறுத்துவார் என்று நம்புகிறேன். இது வரை அடங்க மறுத்த அரசு இனிமேல் கட்டுப்படும் என்று நம்புகிறேன். தமிழ்நாடு அரசு வலியுறுத்தும் அதே ஜனத்தொகை கணக்கெடுப்பை ஐக்கிய ஜனதா தளமும் வலியுறுத்தி பணியச் செய்யும் என நினைக்கிறேன் . இரண்டாவது கூட்டாட்சி தத்துவம். ஆளுநர் என்ற அம்பை இனிமேல் நீங்கள் எதிர்க்கட்சி மீது ஏவ முடியாது ஏனென்றால் கூட்டாட்சி தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட சந்திரபாபு நாயுடு உங்கள் கூட்டணியில் இருக்கிறார்.

பதினெட்டாவது நாடாளுமன்றத்தின் கல்வி அமைச்சர் பதவி ஏற்ற உடன் நீட் தேர்வு முறைகேடு வெளிச்சத்துக்கு வருகிறது. சிபிஐ விசாரிக்கிறது. முதுநிலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வு முதல் நாள் இரவு தள்ளி வைக்கப்படுகிறது. முதுநிலை மருத்துவ நீட் தேர்வு எழுத காத்திருந்த மருத்துவர்கள் தவிக்கிறார்கள். ஏனென்றால் முதுநிலை மருத்துவம் படிப்பவர்களும் மருத்துவர்கள். ஒவ்வொருவரும் அவர்கள் தேர்வு எழுதும் இடத்திற்கு முதல் நாள் இரவே சென்று விட்டார்கள். திடீரென்று தேர்வு ரத்து செய்யப்படுகிறது என்ன நடக்கிறது? உடனடியாக நடவடிக்கை எடுத்தோம் என்று சொல்கிறீர்களே என்ன நடந்தது? எப்படி நடந்தது? எதற்கு நடந்தது? குதிரை ஓடிய பின்பு லாயத்தை பூட்டிய கதையாக இருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்)

என் நண்பர் நாகர் அவர்களே நான் உங்களுக்கு எதிராக பேசலாம் ஆனால் அது உங்களுக்கு ஆர்வமாக இருக்கலாம். நீட் வணிகம் ஆகிறது என்ற ஒரு சந்தேகம் ஏற்படவே நீங்கள் அனுமதிக்க கூடாது. தமிழ்நாடு நீட்டுக்கு எதிராக கிளர்ச்சி செய்கிறது. நீட் தேர்வால் பல மாணவர்கள் தற்கொலை செய்து விட்டனர். நீட்டுக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி விட்டது.

மரபை மீறி நம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட வேளாண் மசோதாக்களுக்கு நம் நாட்டின் குடியரசுத் தலைவர் அனுமதி அளித்து விட்டார் . அந்த மசோதா விவாதிக்கப்படவே இல்லை. நாங்கள் சொன்ன திருத்தங்கள் விவாதிக்கப்படவில்லை. நிலை குழுவுக்கோ தேர்வு குழுவுக்கோ அனுப்பப்படவில்லை. ஆனால் குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்து விட்டார். UAPA விற்கு ஒப்புதல் அளித்து விட்டார் . குற்றவியல் சட்ட திருத்தத்திற்கும் பெயர் மாற்றத்திற்கும் ஒப்புதல் வழங்கி விட்டார். அவற்றிற்கெல்லாம் உடனடியாக கையெழுத்து இட்டு விட்டார்.

தமிழ்நாடு சட்டசபை தீர்மானம்!

இந்திய நாட்டின் ஒரு அங்கமான தமிழ்நாடு சட்டசபையில் ஒருமனதாக நிறை வேற்றப்பட்ட தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக காத்துக் கிடக்கிறது. என்ன நடக்கிறது? மாநிலங்கள் தான் கூட்டாட்சி அரசாங்கத்தை உருவாக்குகின்றன கூட்டாட்சி அரசாங்கம் மாநிலத்தை உருவாக்கவில்லை. மாநில மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை குடியரசு தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். நீட்டை தடை செய் அல்லது தமிழ்நாட்டிற்கு விலக்கு என்ற மக்களின் உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

குடியரசு தலைவர் தனது உரையில் அவசரநிலை பிரகடனத்தை நினைவு படுத்தினார். அவசர நிலை பிரகடனத்தை மறைக்க முடியாது . அவசர நிலை பிரகடனத்தால் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் மிகமோசமாக பாதிக்கப்பட்டது. எங்கள் ஆட்சியை இழந்தோம். எங்களின் தலைவர் தற்போதைய தமிழ்நாட்டின் முதலமைச்சர், நான் எல்லோரும் ஓராண்டு சிறையில் இருந்தோம். நாங்கள் அதை மறுக்கவில்லை. ஆனால் பின்னாளில் இந்திரா காந்தி அம்மையார் சென்னை மெரினா கடற்கரையில் எங்களது தலைவர் கலைஞர் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவசரநிலை காலகட்டத்தில் நடந்த அவலங்களுக்கு வருத்தம் தெரிவித்தார். அப்போது அது அறிவிக்கப்பட்ட அவசரநிலை பிரகடனம் ஆனால் தற்போது பிஜேபி யால் அறிவிக்கப்படாத அவசரநிலை பிரகடனம் அமுலில் இருந்தது . மாநில உரிமைகளை பறித்தீர்கள். சிறுபான்மை யினரின் உரிமைகளை பறித்தீர்கள். CAA ஏன் கொண்டு வந்தீர்கள்? மூன்று நாடுகளை தேர்ந்தெடுத்தீர்கள் ஐந்து மதங்களை தேர்ந்தெடுத்தீர்கள். வேண்டுமென்றே முஸ்லிம்களை சேர்க்காமல் விட்டீர்கள் வேண்டுமென்றே ஸ்ரீலங்காவை சேர்க்காமல் விட்டீர்கள். ஒன்றரை லட்சம் இலங்கை தமிழர்கள் தமிழ்நாட்டில் குடியுரிமை இன்றி தவிக்கிறார்கள் .

ஆனால் உங்களது மசோதாவில் அவர்கள் சேர்க்கப்படவில்லை அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கிறார். குற்றவியல் சட்ட திருத்தத்தின் போது 150 எம்.பி.க்களை தற்காலிகமாக நீக்கம் செய்துவிட்டு அவையில் சட்டத்தை நிறைவேற்று கிறீர்கள். யாரையும் ஆலோசிக்கவில்லை எவரது கருத்தும் பரிசீலிக்கப்படவில்லை ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து கூட பரிசீலிக்கப்படவில்லை . ஒவ்வொரு பிரச்சனைக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. நீங்கள் ஒரு பக்கத்தில் இருக்கலாம் நாங்கள் ஒரு பக்கத்தில் இருக்கலாம். ஆனால் இரண்டு பக்கங்களையும் அலசி ஆராய்ந்து தீர்க்கமாக முடிவெடுப்பதே ஜனநாயகம். ஆனால் நீங்கள் பேச அனுமதிக்கவில்லை பேசுவதை காது கொடுத்து கேட்கவில்லை.

பிரதமர் கடந்த காலங்களில் ஊடகங்களை சந்திப்பதே இல்லை. ஆனால் தேர்தல் பரப்புரையின் போது குறைந்தபட்சம் 100 முறையாவது சந்தித்து இருப்பார். அதன் விளைவு அவர்களுக்கு சோகமே தவிர எங்களுக்கு அல்ல. நாங்கள் அதிகாரத்தில் இல்லை ஆனால் மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஆனால் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை இதுதான் முக்கியம்.

மக்களவையில் ராகுல் காந்தி மிக முக்கியமான பிரச்சினையை எழுப்பினார். பலராலும் புரிந்து கொள்ள முடியாத சில சம்பவங்கள் நாட்டில் நடக்கின்றன. அதாவது பங்குச்சந்தை . பங்குச்சந்தையின் ஏற்ற இறக்கங்களை பெரும்பாலும் சில நிறுவனங்களே தீர்மானிக்கின்றன . அரசின் கொள்கையில் வரி விதிப்பில் பங்குச்சந்தையின் தாக்கம் இருக்கும். நான்காவதாக பங்குச்சந்தையில் செயற்கையாக உருவாக்கப்படும் ஏற்ற இறக்கம். அது 1990 இல் நடந்தது ஹர்சத் மேத்தா என்பவர் அதைச் செய்தார். தற்பொழுது சத்யம் ராஜு.

முதலீட்டாளர்களுக்கு நஷ்டம்!

மே 19ஆம் தேதி ஊடகங்களுக்கு முன்னால் பிரதமர் சொன்னார் பங்குச்சந்தை மேலும் மேலும் வளர்கிறது என்று, ஜூன் 4 க்கு பிறகு வரலாறு காணாத வளர்ச்சியை பங்குச்சந்தை எட்டு என்றும் அதற்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் என்றும் கூறினார் .ஜூன் ஒன்றாம் தேதி உள்துறை அமைச்சர் சொன்னார் ஜீன் 4க்கு பின் பங்குச்சந்தையின் மதிப்பு உயரும். அனைவரும் பங்குகளை வாங்குங்கள் என்று சொன்னார். அவர்கள் சில ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார்கள். ஜூன் 3ஆம் தேதி வாக்களிப்புக்கு பிந்திய கருத்துக்கணிப்பில் ஊடகங்கள் சொன்னன பிஜேபி 401 இடங்களில் வெற்றிபெறும் என்று. 240 எங்கே இருக்கிறது? 401 எங்கே இருக்கிறது? இது எப்படி பிழையாக இருக்க முடியும்? வேண்டுமென்றே செய்தது. 401 இடங்களில் பிஜேபி வெற்றி பெறும் என்று சொன்னவுடன், உங்களுக்கு தகவலுக்காக சொல்லுகிறேன் தேசிய பங்குச் சந்தையின் மதிப்பு 733 புள்ளிகள் உயர்ந்தது. ஆனால் பரிதாபகரமாக பிஜேபியால் ஆட்சிக்கு வர முடியாமல் போனது. ஜூன் நான்காம் தேதி பங்குச்சந்தையின் மதிப்பில் 1379 புள்ளிகள் குறைந்தது. இதனால் சிறிய முதலீட்டாளர்களுக்கும் சேர்த்து 30 லட்சம் கோடி நஷ்டம் ஏற்பட்டது. (குறுக்கீடுகள்) முதல் நாள் பங்குச்சந்தையின் மதிப்பு உயர்ந்தது பங்குகளை நிறைய பேர் வாங்கினார்கள். மறுநாள் பங்குச் சந்தையின் மதிப்பு வீழ்ச்சியை சந்தித்தது. ஆர்வத்தோடு வாங்கிய சிறிய முதலீட்டாளர்களுக்கு பெரிய தொகை இழப்பு ஏற்பட்டது.

பிரதமரும் உள்துறை அமைச்சரும் பங்குச் சந்தையை பற்றி பேசுவது அவர்களது வேலையா அல்லது பொறுப்பான செயல் தானா? நான் சாதாரண ஏழை மனிதர்களுக்காக பேசுகிறேன் (குறுக்கீடு) அவர்கள் பெரும் முதலீட்டாளர்கள் அல்ல சாதாரண முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் ஆர்வம் உடையவர்கள்.அவர்களுக்கு 30 லட்சம் கோடி இழப்பு. இதற்குத்தான் மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணை அமையுங்கள் என்று கேட்டார். இது மிகப்பெரிய பொருளாதார மோசடி. சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நான் தவறை சரி செய்ய சொல்லவில்லை முறைகேடுகளை தவிர்க்கச் சொல்கிறேன். நான் திமுகவைச் சேர்ந்தவன் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவன் .நான் ஒரு யானையை பார்த்தால் அதை குதிரை என்று சொல்லுவேன் ஆனால் அதை யானை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கு உள்ளது.

ஆனால் நாங்கள் யானை என்றே சொல்லுகிறோம். நீங்கள் அதை ஏற்க மறுக்கிறீர்கள் நாங்கள் சொல்வதால் ! நாங்கள் உள்ளதை உள்ளபடி சொல்வதால் நீங்கள் ஏற்க மறுக்கிறீர்கள். ஜனநாயகம் உரிமை அற்றாகிவிட்டது. எங்களை பாராளுமன்றத்தில் பேச அனுமதிக்கவில்லை. எங்கள் குரலை கேட்கவில்லை. இதுதான் கடந்த 10 ஆண்டுகளாக நடந்தது . உங்கள் கூட்டணியில் இருக்கும் இருவர் சமூக நீதி பாதுகாவலர் நிதீஷ் குமாரும் கூட்டாட்சி தத்துவத்தில் அக்கறை கொண்ட சந்திரபாபு நாயுடுவும் உங்களுக்கு கடிவாளம் இட்டு தேசத்தை பாதுகாப்பார்கள். நாடாளுமன்ற மைய மண்டபம் எங்களுக்கு வேண்டும். சன்சாத் டிவி ஆளுங்கட்சியையும் எதிர்க்கட்சியையும் சமமாக நடத்த வேண்டும் . பெரும்பாலான நேரங்களில் ஒளிபரப்பு செய்வதே இல்லை . ஊடகங்கள் இருந்தால் ஆவது மக்களுக்கு கருத்து சென்று சேரும். ஊடகங்களுக்கு அனுமதி இல்லை எங்கே ஜனநாயகம் இருக்கிறது? பொறுப்புள்ள ஊடகங்கள் நாடாளுமன்றத்துக்குள் அனுமதிக்கப்படுவதில்லை .சன்சாத் தொலைக்காட்சி உண்மையை காட்டுவதில்லை .

இந்த ஆட்சி ஐந்தாண்டுகள் நடக்க வேண்டும் ஆனால் எத்தனை ஆண்டுகள் நடக்கும் என்று எனக்கு தெரியாது .நாங்கள் அவ்வாறு நடக்க வேண்டும் என்று விரும்பவில்லை. அவர்களுடைய பாதையை சரி செய்ய வேண்டும் இல்லாவிட்டால் மக்கள் அவர்களுடைய ஆட்சியை முடிப்பார்கள் .ஜனநாயகத்தையும் எதிர்க்கட்சியையும் மதிக்க வேண்டும் . மக்களைப் பற்றி ஏழைகளைப் பற்றி விவசாயிகளைப் பற்றி வேலைக்காக ஓடுகின்ற இளைஞர்களை பற்றி சிந்திக்க வேண்டும். இனிமேல் மசோதாக்கள் முரட்டுத்தனமாக திணிக்க முடியாது. கடந்தாண்டு ஏழு மசோதாக்கள் மட்டுமே நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இம்முறை மசோதாக்களை நிலை குழுவுக்கு தேர்வு குழு அனுப்ப வேண்டும். அனைவரையும் கலந்தாலோசித்து விரிவான மசோதாவாக கொண்டு வந்து சட்டமாக்க வேண்டும். இந்த விவாதத்தின் வாயிலாக மாட்சிமைக் குரியா குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன் . நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கியது போல தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட நீட்விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் வழங்குமாறு வேண்டுகோள் வைக்கிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நன்மதிப்பை பெற்ற விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் அன்னியூர்.ஏ.சிவா (எ) சிவசண்முகத்திற்கு (243. 274 வார்டு பகுதிகளில்) காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜிம், எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம். நாக தியாகராஜன், எம்.எல்.ஏ. மற்றும் நெல்லித்தோப்பு கார்த்தி, கதிர்க்கிராமம் தொகுதி செயலாளர் ஏ.பி.ஆர். வடிவேலு ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.